உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 1985 இன் உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் கட்டளை இல 06 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின்

உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிற்கு சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கொடுப்பனவிற்கான பங்களிப்பு ரூபா 41,700,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஓய்வூதியத் திணைக்கள கணனி தரவு முறைமையின் செலவின வகைப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மொத்த ஓய்வூதியச் செலவினம் ரூபா 634,964,421 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 593,264,421 தொகையான ஓய்வூதியச் செலவினம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 1999 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 3,417,942 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் கணக்கின் மீதி தீர்க்கப்படுவதற்காக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியிராமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்கியிராமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1985 இன் உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைக் கோவையின் 8 ஆம் பிரிவு | பங்களிப்பாளரினாலும் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட சகல பங்களிப்புப் பணம் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 4.1(அ) பந்தி | மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டு இதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 30,521,359 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 8,329,948 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 38,851,307 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான பங்களிப்பு ரூபா 41,700,000 ஆகக் காணப்பட்டமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

## 4. நிதியத்தின் செயற்பாடு

1985 இன் 10 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் முதன்மையான கட்டளைச்சட்டத்தின் 16.அ(2)(1) ஆக உள்ளடக்கப்பட்ட பிரிவின் பிரகாரம் மேற்குறித்த நிதியத்தின் கட்டுப்பாடு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் வசமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 13 ஆம் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் மூலம் நிதியத்தின்

மாதாந்த சம்பளப் பதிவேடு தயாரிக்கப்படுவது மற்றும் கோவைகளின் பொறுப்பு 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் பிரதேச செயலாளருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வங்கிக் கணக்கிணக்கம்
(இ) ஓய்வூதியக் கொடுப்பனவு
(ஈ) முதலீடு
(உ) பங்களிப்புத் தொகை தொடர்பான பெறுவனவுப் பதிவேடு